


# தற்கொலை

# தற்கொலை செய்வது பிரச்சனையை இன்னொரு பிறவிக்கு தள்ளி வைப்பதாகும்

( பீட்டர் ரிச்சல்யூ)

"தற்கொலை செய்வது ஒரு பெரிய குற்றமா?" என்பது பலருக்கு சந்தேகம்.

உண்மையில் "உயிரை பலவந்தமாக எடுப்பது" - குற்றம் மட்டுமல்ல முட்டாள்தனமும் ஆகும்.

கஷ்டங்களுக்கு பயந்து தற்கொலை செய்து கொண்டு வாழ்க்கையை விட்டு ஓடுவதால்.. அந்த கஷ்டங்களுக்கு தீர்வு தெரிந்து கொள்ளாதது மட்டுமல்லாமல் ..அந்த கஷ்டங்களை அடுத்த பிறவிக்கு தள்ளி வைப்பதாகும்.

"சூழ்நிலையின் தாக்கத்தால் நான் என் உயிரைப் பறிக்க நேர்ந்தது" என்று சிலர் வாதிடுகிறார்கள். ஆனால், உண்மையில் அந்த நிலைமைகள் அவர்களுடைய ஆன்மாவின் வளர்ச்சிக்கு அவசியம்.. இது அவர்களுடைய பிறவி திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால்தான் அந்த சூழ்நிலைகள் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் வருகிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள மாட்டார்கள்!

பள்ளிக்குச் செல்வதை ஏமாற்றும் குழந்தை மீண்டும் ஒரு வருடம் அதே வகுப்பில் படித்து, மீண்டும் கட்டணம் செலுத்தி, நடப்பு வகுப்பு பாடங்களில் குறைந்தபட்சம் தேர்ச்சி பெற்று உயர் வகுப்பிற்குச் செல்வதைப் போன்றதே தற்கொலை செய்து கொண்டவர்களின் நிலை!

PERSATUAN MEDITASI PIRAMID
ENERGY WISDOM CONSCIOUSNESS
SELANGOR & WP(KL)
BE A LIGHT UNTO YOURSELF

'கர்மசித்தாந்தம்'கூட "இந்த வாழ்க்கையின் சூழ்நிலையை எதிர்கொள்ள முடியாமல் கோழைத்தனத்தால் தற்கொலை செய்து கொண்டால், வாழ்க்கையில் மீண்டும் அதே சூழ்நிலைகளை சந்திக்க வேண்டும்!" என்று கூறுகிறது.

எந்தப் பிறவியின் சூழ்நிலையை அந்தப் பிறவியிலேயே சந்திக்காமல் தடைகள் மற்றும் துன்பங்களில் இருந்து ஓடினால், அந்தத் தடைகள் மற்றும் அந்த துன்பங்களை மறுபிறவில் சந்திக்க வேண்டியிருக்கும். இது சிருஷ்டியின் முடிவில்லாத நியதி!

இப்படி மீண்டும் மீண்டும் அவைகளிடமிருந்து ஓடிக்கொண்டே இருந்தால், முட்டாள்தனமாக ஆன்மாவின் வளர்ச்சியில் சேதப்படுத்தி, ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியில் நம்மை நாமே கீழ் இறக்கியவர்கள் ஆவோம்!

எனவே தடைகளை எதிர்கொண்டு, அவற்றைத் தாண்டி, அவர்கள் கற்பிக்கும் பாடங்களை கற்றுக் கொள்ளும் வரை, ஆன்மாவின் பரிபூரண நிலையை நோக்கி ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது! அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை இது!

பொதுவாக தற்கொலை செய்து கொண்ட பிறகு .. உயிரற்ற உடலில் இருந்து வெளிவரும் ஆன்மா வருத்தம் கொள்கிறது. அறியாமையால் செய்த முட்டாள் தனத்தை துடைக்க நினைத்து அதற்காக எதையும் செய்ய அது தயாராகிறது.

ஆனால், 'நடந்ததை அழித்தல்' என்பது முடியாத காரியம். மீண்டும் பூமிக்கு செல்வதும் இயலாத காரியம்.

அதனால் இன்னொரு பிறவி எடுக்கும் காலம் வரை காத்திருக்க வேண்டும்.. அந்தப் பிறவியில்கூட திரும்பவும் அதே கஷ்டங்களை சந்திக்க வேண்டும்.

தற்கொலை செய்து உடலை விட்டு வெளியேறிய பிறகு, ஆன்மா தனது 'அறியாமைக்கு' வருந்தி, மீண்டும் பௌதீக உடலில் நுழைய கடுமையாக முயற்சிக்கிறது.

தன் சூட்சும உடலைச் சூழ்ந்திருக்கும் ஈத்தரிக் உடலிலிருந்து வெளிவர முடியாமல், பூமியைப் பற்றிக் கொண்டு, பூமிக்குக் கட்டுப்பட்ட ஆன்மாவாக சுத்தித் திரிகிறது.

பொதுவாக மற்ற இயல்பான காரணங்களில் மரணம் ஏற்படும்போது பௌதீக உடலில் இருந்து வெளிவரும் ஆன்மாவிற்கு மேல் உலகங்களுக்குச் செல்வதற்கு ஆஸ்ட்ரல் மாஸ்டர்ஸ் தம்முடைய உதவிகளை வழங்குவார்கள்!

ஆனால், வாழ்க்கைபற்றிய மதிப்பில்லாமல் தற்கொலை செய்து கொண்டு பௌதீக உடலை விட்டு வெளியே வரும் 'அறியாமை நிறைந்த ஆன்மாக்களுக்கு' அவர்கள் எந்த உதவியும் செய்ய மாட்டார்கள்!

அத்துடன் அந்த ஆன்மா மேல் உலகங்களுக்குச் செல்ல முடியாமல் மீண்டும் தன் பௌதீக உடலுக்குள் நுழைய முடியாமல் குழப்பத்தில் கீழ் உலகங்களில் அலைந்து திரிந்து, ஜட உலகத்தை விட்டு மறையாமலும், ஆஸ்ட்ரல் உலகங்களைச் சேர்ந்தவனாகவும் இல்லாமல், இருமுகம் கொண்ட முட்டாளாக மாறி, சொல்ல முடியாத தனிமையில் இருக்கிறான்!

அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தகைய சூழ்நிலைகள் அவனை மிகவும் வேதனை அடையச்செய்து, அவனை மனித பிறவியை வெறுப்பவனாக அல்லது கடவுளை வெறுப்பவனாக மாற்றுகிறது.

அத்துடன் ஆன்மா தான் தற்கொலை செய்துகொண்ட அந்த இடத்தில் சுற்றித் திரிகிறது.. குழப்பத்தில் தனிமையை உணர்கிறது.. அந்தத் தனிமையால் அதிலிருந்து விடுபட உதவிக்காக ஏங்குகிறது.. பலவீனமான மனங்களைக்கூட தற்கொலைக்குத் தூண்டுகிறது...

இவ்வாறு பிறரைத் தற்கொலைக்குத் தூண்டிய கர்ம வினையின் பலனை ஆன்மா திரட்டிக் கொள்கிறது. அதனால், அடுத்து வரும் பிறவிகளில் இன்னும் பயங்கரமான கர்ம பலன்கள் அதற்கு காத்திருக்கும்.

எனவே, "தற்கொலை என்பது பிரச்சனையை மற்றொரு பிறவிக்கு தள்ளிப்போடுமே தவிர பிரச்சனைக்குத் தீர்வாகாது" என்பதை இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும்!

"இந்த உலகில் நீங்கள் உங்களைக் கொன்றுவிட்டு தப்பிக்க நினைக்கும் அளவுக்கு எந்தவொரு சூழ்நிலையும் பயங்கரமானது அல்ல" என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

கொஞ்சம் பொறுமையாக இருந்தால் பிரச்சனை சரியாகி தீர்வுகள் ஒவ்வொன்றாக கிடைக்கும். எனவே அனைவரும் இந்த ஆன்ம ஞானத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

/ முற்றும் /

நன்றி: The Soul's Journey
தமிழாக்கம்: திருமதி. அருணா தேவேந்திரன், கிருஷ்ணகிரி

PERSATUAN MEDITASI PIRAMID
ENERGY WISDOM CONSCIOUSNESS
SELANGOR & WP(KL)
BE A LIGHT UNTO YOURSELF

நன்றி: The Soul's Journey

தமிழாக்கம்: திருமதி. அருணா தேவேந்திரன், கிருஷ்ணகிரி